# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 13

| | | | |
|---|---|---|---|
| Name | : பார்வதி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.பன்னீர்செல்வம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of December 2024.

(Accused absent. Petition u/s. 317 Crpc filed and allowed)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் கடந்த 2017 ம் ஆண்டு மதுரை மாவட்டம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து உடல் நிலை சரியில்லாததால் விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2016 ம் ஆண்டு பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 19.08.2016 அன்று மாலை 05.00 மணியளவில் நான் நிலைய அலுவலில் இருந்தபோது அசா 1 பிருந்தா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.7/2016, இதச பிரிவுகள் 417, 376, 506(1)-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அசாஆ 8** ஆகும்.

2. பின்னர் அன்றையதினமே மாலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகேசன் மற்றும் பொங்கியான் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அசாஆ 9 ஆகும். மாதிரி வரைபடம் அசாஆ 10 ஆகும்.

3. பின்னர் சாட்சிகள் பழனிச்சாமி, சிவகாமி, ராஜாத்தி, WPC மகேஷ்வரி மற்றும் சாட்சிகள் முருகேசன், பொங்கியான் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.08.2016 அன்று இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் சாட்சிகள் ராமசாமி மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை தேடி புளியம்பட்டி, ராசக்காபாளையம் ஆகிய இடங்களில் தேடி வந்த நிலையில்

எனக்கு கிடைத்த தகவலின் பேரில் நெகமம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த எதிரியை வாதியின் சித்தப்பா செல்வராஜ் அடையாளம் காட்ட 20.08.2016 அன்று 16.00 மணிக்கு கைது செய்து குற்றம் பற்றி எடுத்துச்சொல்லியும் உச்ச நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி மாலை 04.15. - 05.00 மணி வரை ஆஜர் சாட்சிகள் ராமசாமி மற்றும் செல்வராஜ் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 17.30 மணிக்கு எதிரியை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்தேன். அதன் பின் 19.00 மணிக்கு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

4. 24.08.2016 அன்று பொள்ளாச்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் மேற்படி எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு அனுமதிக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். மேற்படி நடுவர் அவர்களின் உத்தரவின்பேரில் கோவை மத்திய சிறை சென்று எதிரி செல்வத்தை தலைமைக்காவலர்கள் 2167, 1452 ஆகியோர் மூலமாக வழிக்காவல் எடுத்து வந்து பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்று தலைமை மருத்துவ அதிகாரியிடம் தபால் கொடுத்தேன். பின்னிட்டு மருத்துவர் பேரானந்தம் அவர்கள் மேற்படி எதிரி ஆண்மை தன்மை உள்ளவரா என்று பரிசோதனை செய்தார். பின்னர் எதிரியை கோவை மத்திய சிறையில் ஒப்படைத்தோம்.

5. 30.08.2016 அன்று மருத்துவர் பேரானந்தம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரியை பரிசோதனை செய்த சான்று பெற்றேன். மேற்படி மருத்துவ அறிக்கை எற்கனவே அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 26.09.2016 அன்று நான் பணிமாறுதலாகி மதுரை மாவட்டம், தெற்கு மண்டலத்திற்கு சென்றதால் மேற்படி வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் கற்பகம் அவர்கள் வசம் மேல் புலன் விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. முதல் தகவல் அறிக்கையில் 8 வது காலத்தில் வாதியால் தாமதம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் புகார் தருவதில் என்ன தாமதம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். பொதுவாக முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர்தான் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரியல்ல, உதவி ஆய்வாளர் இல்லாத பட்சத்தில் காவலர்கள் பதிவு செய்யலாம்.

2. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அசா 1ன் வீடு நெரிசலான பகுதியில்

அமைந்துள்ளது என்றால் சரிதான். அசா 1ன் வீட்டின் மொத்த பரப்பளது 10 x 12 அடி என்றாலும் அதை ஒட்டி ஒரு சமையல் அறை மட்டுமே இல்லை என்றால் சரிதான். காவல் அடைப்பு அறிக்கையில் எதிரி அசா 1 உடன் வலுக்கட்டாயமான உடலுறவு வைத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் அடைப்பு அறிக்கையில் அசா 1உடன் எதிரி உடலுறவு வைத்து தற்போது சேர்ந்து வாழ மறுப்பதாகவும் அதனால் அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டுவதாகவும் காணப்படுகிறது என்றால் சரிதான்.

3. மருத்துவர் அறிக்கையில் காவலர் 952 கார்த்திகேயன் எதிரியை அழைத்து வந்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். காவலரின் எண்ணை மருத்துவர் தவறாக குறிப்பிட்டுள்ளார். மருத்துவர் பேரானந்தம் எதிரிக்கு ஆண்மை தன்மை உள்ளதா என்று பரிசோதனை செய்துள்ளார் என்றால் சரிதான். அசா 1 எதிரியை 1 வருடமாக காதலித்து வந்ததாக என் விசாரணையில்கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரி ஞாயின்றுக்கிழமை யாருமில்லாத சமயத்தில் தன் வீட்டுக்கு வந்ததாகவும், எதிரி 2 நாட்களில் தன்னை திருமணம் செய்துகொள்வதாக கூறியதாகவும் அசா 1 என் விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

4. மேற்படி இரண்டு நாட்கள் கழித்து 4 மாதங்கள் கழித்துதான் புகார் தரப்பட்டுள்ள நிலையில் இடைப்பட்ட காலத்தில் அசா 1 ஏன் புகார் தரவில்லை என்பது குறித்து என் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தன் பெற்றோர் புகார் கொடுப்பதற்கு தன்னை நிலையம் அழைத்து வந்ததாக கூறியுள்ளார். சாட்சி பழனிச்சாமி மற்றும் அசா 1ன் தாயார் சிவகாமி ஆகியோர் அசா 1ம் எதிரியும் காதலித்து வந்ததாக தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான்.

5. மருத்துவர் ராஜாத்தி DGO, என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முருகேசன் அசா 1ம் எதிரியும் பழகி வந்ததாக தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

6. சாட்சி பொங்கியான் எதிரி அசா 1ஐ திருமணம் செய்ய மறுத்ததால் அசா 1 எதிரி மீது புகார் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். முதல் நிலைக்காவலர் 1452 கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய முதற்கட்ட புலன் விசாரணையில் அசா 1ம் எதிரியும்

பரஸ்பரம் பழகி வந்தாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எதிரி எவ்வித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.